# மவுண்ட் றூயிட் தமிழ்க் கல்வி நிலையம்
# Mount Druitt Tamil Study Centre

Mobile: 0413 229 638 | Email :mtdruitttsc@gmail.com | Web : www.mtsc.org.au




பேச்சுப் போட்டி 2024

## ஆண்டு 9

பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

இங்கு வருகை தந்திருக்கும் பெரியோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் சக மாணவர்களுக்கும் தாழ்மையான வணக்கங்கள்.

**'வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!'**

# பாரதியின் தமிழ்த் தொண்டு

முத்தமிழ் மொட்டுகளால் கவி பாடி நம் தமிழ்த் தாயை அணையாத தீபமாக என்றும் சுடர் விட்டு எரியச் செய்தார் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற மகாகவி சுப்பிரமணிய பாரதியார். எட்டயபுரத்தில் பிறந்து, தான் வாழ்ந்த சூழலை மையமாக வைத்துத் தமிழை வளர்த்த பெருமையும் அவரையே சாரும்.

சுப்பையா என்ற இயற்பெயருடன் வாழ்ந்த நம்கவி, ஏழு வயது முதலே கவிபாட ஆரம்பித்தார். கவிதை இலக்கியத்திற்குப் புது வடிவம் கொடுத்து, புதுக்கோணத்தில் கவி புனைந்தார். பாரதியார், தனது பதினோராம் வயதில் **'மகாகவி'** எனும் பட்டத்தைப் பெற்றார்.

விடுதலை உணர்வினை மக்களின் இதயத்தில் நுழைய வைப்பதற்காக 'நாட்டு வணக்கம்' என்ற பாடலை இயற்றினார்.

பெண் விடுதலைக்காக அயராது பாடுபட்ட பாரதி, அன்னை பராசக்தியை புதுமைப் பெண்ணாக வடிவமைத்து கவியினால் தமிழுக்கு அணி செய்தார்.

பாமர மக்களுக்கும் விளங்கக்கூடிய வகையில் நொண்டிச்சிந்து, காவடிச்சிந்து முதலிய சிந்து வகைகளை இலகு தமிழில் இயற்றி, மக்கள் கவியானார்.

**செந்தமிழ் நாடெனும் போதினிலே – இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே ..**
என்ற வரிகள், பாரதியின் தமிழ்ப் பற்றையும் நாட்டுப் பற்றையும் பிரதிபலிக்கின்றன.

சாதி, மத, இன வேறுபாடுகளால் வாழும் மக்களுக்கு, "வெண்ணிலாவே ..." என்ற கவிதையின் மூலம் நல்லறம் கூறினார்.

இவ்வாறு, தமிழுக்காகத் தொண்டாற்றிய பாரதி,1921 ஆம் ஆண்டு, ஒரு திருவிழாவின் போது, மதம் கொண்ட யானையினால் தாக்கப்பட்டு இறைவனடி சேர்ந்தார்.

பாரதியின் வழியில் நாமும் சென்று, தமிழைக் கற்போம், தமிழுக்குத் தொண்டாற்றுவோம்.

வாய்ப்புக்கு நன்றி
வணக்கம்.



ஆக்கம்: ஆசிரியர் திருமதி. நிர்மலா திலகரட்ணா.